தமிழ்ச்சிட்

த்தமிழ்
றுவர்
லயிதழ்

விலரும் சிற்சிலகால்
ஆர்ப்பரிப்பால் ஆன்ற
வுளர்போல் வாய்ச்சொல்
அவிழ்ப்பர் — வறிதே
மின்னல் ஆர்த்துப்
பெயல்துறக்கும் வானுண்(டு)!
ம்பணியொன் றன்றோ அளவு!

குரல்
3.

இசை
2.

வி
20
கா
சு.

காக்கைப் பள்ளிக்கூடம்

பறந்து வந்த காக்கை யெல்லாம்
பள்ளிக் கூடம் போட்டதாம்!

மறந்து போன பாட்டை எல்லாம்
மீண்டும் மீண்டும் கேட்டதாம்!

கழுத்தைச் சாய்த்துக் காதை வளைத்துக்
கவனத் தோடு நின்றதாம்!

எழுத்தில்லாமல் ஏடில்லாமல்
எல்லாம் கற்றுக் கொண்டதாம்!

நந்தன் வீட்டுக் கூரை மேலே
நாளும் வந்து கூடுமாம்!

குந்தி யிருந்து பாடம் படித்துக்
கூடிப் பறந்தே ஓடுமாம்!

இரையைக் கண்டால் காகா வென்றே
இனத்தைக் கூவி அழைக்குமாம்!

உரையைக் கேட்டே காக்கை எல்லாம்
ஒன்ருய் உண்டு பிழைக்குமாம்!

துரை-மாணிக்கம்.

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ் சிறுவர் கலை இதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

தூவல்-3. | தி.பி. ௧௯௯௯ (கன்னி) புரட்டாசி அக்-68 | இசை-2.

தமிழும் ஆங்கிலமும் தவறாது கற்பாய்!

அருமைத் தம்பியே! அழகுத் தங்கையே!
பெருமைக் கல்வியைப் பிழையறக் கற்றுவா!

இமிழ்கடல் உலகில் இருக்கும் மொழிகளுள்
தமிழ்மொழி உனக்குத் தாய்மொழி அன்றோ?

இன்பத் தமிழே எல்லா மொழிக்கும்
முன்பு பிறந்த முதுமொழி யாகும்!
செம்மையும் நுண்மையும் செறிந்த மொழியிது!
நம்மையும் பிறரையும் நயந்த மொழியிது!
பண்பும் பயனும் பயக்கும் மொழிதமிழ்!
இன்பமும் அறமும் ஈயும் மொழிதமிழ்!
நம்மின் உளத்தையும் நடப்பையும் வாழ்வையும்
செம்மைப் படுத்தும் சிறந்த மொழியிதே!

வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர்-பெருஞ்சித்திரன்.
தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

'ஒளிதரும் வாழ்க்கைக்கு உகந்த மொழி'—என
வெளிநாட் டறிஞரும் வியந்த மொழியிதே!

தமிழரின் பெருமை தமிழினுல் வந்தது!
தமிழரின் சிறுமை தமிழ்கெட வந்தது!

ஆகவே தம்பி, அன்றன் றைக்கும்
அறிவும் உணர்வும் தமிழினுல் அடைக!
நெறிகளும் முலறகளும் நிறைந்துள, தமிழில்!
தமிழ்மொழி அறிவைத் தவருது பெறுக, நீ!
தமிழில் உள்ள நூல்களைக் கற்றுவா!
தமிழ்வர லாறும் தமிழரின் வாழ்வும்
கமழக் கமழக் கற்றுவா தம்பி!

ஆங்கில மொழியையும் அதனெடு கற்பாய்!
ஈங்கிவை இரண்டையும் இருவிழி எனநினை!
ஆங்கில மொழியினுல் அறிவியல் தேரலாம்!
வீங்குநீர் உலகில் யாங்கணும் உலவலாம்!
ஆங்கிலம் நம்மின் அடிமையை மீட்டது!
தீங்குசெய் 'சாதி'யின் இழிவைத் தீய்த்தது!
உலக ஒற்றுமை உணர்வை வளர்த்தது!
கலக மாந்தரின் கயமையைப் புதைத்தது!

இலகு நூல்கள் பற்பல இயல்வது!
உலகத் தொடர்புக் கென்றும் உகந்தது!
அறிவை மதிப்பவர் அறிவு மொழி, அது;
அறிஞரை மதிக்கும் அறிஞர் மொழி, அது!
பாலில் கலந்த நஞ்சினைப் போலக்
காலப் போக்கில் தமிழில், தமிழரில்
கலந்து விட்ட கயமையை உணர்த்தி
நலந்தரும் வழியை நமக்கறி விப்பது!

எனவே, தம்பி இனிமைத் தமிழுடன்
ஆங்கில மொழியிலும் அறிவைப் பெறுக, நீ!

'அகம்'—தமிழ் மொழியெனில், ஆங்கிலம் 'புறமாம்'!
புகப்புக இன்பம் புகுத்தும் தமிழ்மொழி!
தொகத்தொக வாழ்வைத் துலக்கிடும் ஆங்கிலம்!
தகுமிவ் விரண்டையும் தவருது கற்றுவா.

பன்மொழி யறிவதும் தவறிலை; எனினும்
இன்புறு வாழ்விற் கிருமொழி போதுமே!
கல்வி என்பது கருத்தை அறிவது;
பலவாம் மொழிகளைப் பயிலுதல் அன்று!

-பெருஞ்சித்திரன்.

கழுதை அழுத கதை.

-துரை-மாணிக்கம்-

நாணிநின்ற காளை
கழுதை நலங்கேட்ட
பாணியினை எண்ணிப்
பலவாய் மகிழ்ந்தபடி,

"வா, கழுதை அம்மையே!
வாழ்க்கை நலந்தானே?-
ஆகா, உன் பிள்ளை
அரபிக் குதிரைபோல்
தோற்றமளிக் கின்றுளே!
துள்ளும் துடுக்குப்பெண்!-
ஆற்றுப் படுகை
மணல்போல் உடலழகு!
அப்பனையே ஒத்த
அழகுப்பெண்!-போகட்டும்
ஒப்பரிய நின்கணவன்
உடலம் நலந்தானே!"

-என்றுமிக அக்கறையாய்க்
காளை வினவிற்று.
நின்ற கழுதைதன்
நீண்ட செவிகளிலே-
அன்புக் கணவனெனும்
அச்சொல் விழுந்தவுடன்,
மின்சாரம் பாய்ந்ததுபோல்
மேனி சிலிர்சிலிர்க்க
மண்சார மற்ற
மரமற்று வீழ்வதுபோல்,
பொத்தென்று கீழே
பொதிபோல் விழுந்ததுவே!

வீழ்ந்தவுடன் காளைக்கோ
ஒன்றும் விளங்கவில்லை!

ஆழ்ந்த துயரத்தால்
குட்டி அதிர்வடைந்து,
செய்வ தறியாமல்
தாயுடலைச் சுற்றியது!
பெய்மழைபோல் கண்களிலே
நீரும் பெருகிற்று!

காளை மனந்தேறிக்
காற்ருய்ப் பறந்தோடி,
மீளவந்து வாய்நீரைப்
பெண்கழுதை தன்முகத்தின்
மேல்ஒழுக விட்டுவிட்டு,
மேனி விசித்தழுத
பால்முகத்துக் குட்டியினை
மெத்தப் பரிவாக
“ஒன்றுமில்லை பெண்ணே,உன்
அம்மா உடனெழுவாள்;
என்றும் இதுபோல
நான்கண்ட தில்லை;'-என்று
தேற்றியது; அக்கால்
கழுதை விழிதிறந்தே-
ஆற்ருமை யோடே
அழுது புலம்பிற்று!

காளை மனங்கசிந்து
கண்கள் நனைந்திடவே
தோளை மிகத்தாழ்த்தி,
“துன்பந்தான் என்ன?”-எனக்
கேட்டவுடன் பெண்கழுதை
உள்ளம் கிளர்வுறவே,
வாட்டத்தை எல்லாம்
வடித்தெடுத்துக் கூறிடுமே:
“ஐயோ,நான் ஏதுரைப்பேன்?
அத்துயரை என்னென்பேன்?
பொய்யாய் வெறும்பொக்காய்ப்
போனதுவே என்வாழ்க்கை!

என்னருமை நாயகரைப்
பார்த்திருக்க மாட்டீர்கள்!
பொன்னால் வடித்தவுடல்!
பூப்போல் படிந்தமயிர்!

வெள்ளை வெளேரென்னும்
மூக்கோ மிகஅழகு!-
உள்ளம் அதனைவிட
வெள்ளை! மிகவெள்ளை!
கள்ளமிலா ஐயனையா,
என்கணவர்! அன்னவரின்
கொள்ளை அழகில்
குமைந்துபோய் நின்றவள்நான்!

ஓடாய் உழைத்திட்டார்;
ஒன்றன்று; மூன்றுபொதி
ஆடா தசையாமல்
ஆற்றுக்கும் வீட்டிற்கும்-
நாளும் சுமப்பார்;
நடைக்கு மனஞ்சலியார்!
நாளும் பணிமுடிந்தால்
நாட்டாண்மைக் காரரோ

எங்கள் இருவரையும்
ஒன்றாய்ப் பிணித்திடுவார்!
பொங்குமய்யா என்னுள்ளம்!
பூரித்துப் போவேன்நான்!

ஒத்தநடை போட்டபடி
ஊரெல்லாம் காடெல்லாம்-
புத்துணர்வு கூட்டுகின்ற
புல்லடர்ந்த பக்கமெல்லாம்
மேய்ந்திருப்போம்! அக்கால்
மனத்தால் இணைந்துவிட்டோம்!
வாய்ந்ததொரு நாள்முதலா
வாழ்க்கை தொடங்கிவிட்டோம்!

ஓராண்டு செல்ல,
ஒருநாள் நலிவுகொண்டார்!
நாராய் மிகமெலிந்தார்;
நானோ நிறைசூலி!
மூன்றுபொதி தூக்குகின்ற
வன்முதுகு கூன்விழவே—
ஊன்றுகால் போட்டே
உடல்தளர்ந்து சோர்ந்துவிட்டார்!

மேனி தளர்ந்ததனால்
மேய்ச்சலுக்குச் செல்வதில்லை;
தீனிக்குக் கேடெனவே
ஆண்டை விரட்டிவிட்டார்!

நொண்டிநொண்டிச் செல்வார்;
நொடிதங்கிப் பின்நடப்பார்.—
கண்டுகண்டு நொந்தேன்!
கடினமனக் காரிநான்!
இல்லையென்றால் என்றோ
இறந்திருக்க மாட்டேனோ?
புல்லையா தின்றேன்!
புழுதியன்றோ தின்றது நான்!
இப்படியே கண்முன்
இருந்த அவரொருநாள்
எப்படியோ எங்கேயோ
என்னைவிட்டுப் போய்விட்டார்!

—தொடரும்.

கணிய (சோதிட)ப் பித்தர்கள்!

'பிரான்சு' நாட்டில் ஏறத்தாழ 5,00,000 கணியர்கள் (சோதிடர்கள்) உள்ளனராம். அவர்களில் பாரிசில் மட்டும் ஏறத்தாழ 10,000 பேர்கள் இருக்கின்றார்களாம். அந்நாட்டினர் கணியம் பார்க்கச் செலவிடும் தொகை 65 கோடி தாலர்கள். அவ்வரசு அறிவியல் ஆய்விற்காகச் செலவிடும் தொகையை விட இது மிகுதியானதாம்.

—பெருங்காப்பியன்.

இந்த இலக்கியம்

அகநானூறு.

அகநானூறு எட்டுத்தொகை நூல்களில் ஏழாவதாகும். இஃது அகப்பொருள் பற்றிய நானூறு செய்யுட்கள் கொண்டதாதலின், இப் பெயர் பெற்றது.

நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை ஆகியனவும் அகப்பொருள் பற்றியனவே யெனினும், இந்நூல் அகப்பொருட் சுவை நிரம்பப்பெற்றிருத்தலின், இத்தகைய சிறப்புப் பெயரால் வழங்கப்பெற்றது.

இந்நூலில் அமைந்த பாடல்கள் குறைந்தது ௧௩ அடியும், மிகுந்தது ௩௧ அடியும் கொண்டவை. அகவற்பாவினுல் அமைந்த ஏனைய நூல்களைவிட, இந்நூல் அடியளவில் மிகுந்திருத்தலின் நெடுந்தொகை எனவும் கூறப்பெறும். இறையனுர் அகப்பொருள் என்னும் நூலின் உரையாசிரியர் இப்பெயராலேயே இந்நூலைக் குறிக்கின்ருர்.

அன்றியும், அகம், அகப்பாட்டு என்னும் பிற பெயர்களாலும் இந்நூல் வழங்கப்பெற்றுள்ளது.

இந்நூலில், கடவுள் வாழ்த்துச் செய்யுட்கள் நீங்கலாக, 400 செய்யுட்கள் உள்ளன. இந்நானூறு செய்யுட்களும் களிற்றியானை நிரை (1-120), மணிமிடை பவளம் (121-300), நித்திலக்கோவை (301-400) என மூன்று பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ளன. மேலும், இச்செய்யுட்களில் (3, 3. 5, 7 என்பனபோல) ஒற்றைப்படை எண்கள் உடையவை பாலைத்திணைக்கு உரியனவாகவும், 2, 8, 12. 18 என இவ்வாறு இரண்டும் எட்டுமாக வருவன குறிஞ்சித்திணைக்கு உரியன

வாகவும், 4, 14. 24 என்பன போல நான்காம் எண் பெற்று வருவன முல்லைத்திணைக்கு உரியனவாகவும், 6, 16, 26 என இங்ஙனம் ஆறும் எண் கொண்டவை மருதத்திணைக்கு உரிபனவாகவும், 10, 20, 30 எனப் பத்தாம் எண் பெறுவன நெய்தல்திணைக்கு உரியனவாகவும் தொகுக்கப்பட்டுள்ளன.

இந்நூலைத் தொகுத்தவர் மதுரை உப்பூரிகுடி கிழார் மகனார் உருத்திர சன்மர். தொகுக்கச் செய்தவர் பாண்டியன் உக்கிரப்பெரு வழுதியார்.

இந்நூலில் 114, 117, 165 ஆம் பாடல்களை இயற்றிய ஆசிரியர் களின் பெயர்கள் காணப்பெறவில்லை. ஏனைய பாடல்களை இயற்றிய வர் 142 புலவர் ஆவர்.

இத்தொகை நூலின் முதல் தொண்ணூறு பாடல்களுக்குப்பழைய உரை ஒன்றுள்ளது. இது மிகச் சிறந்ததாகும். இந்நூற் செய்யுட்கள் ஆங்காங்கு வரலாற்றுக்குறிப்புக்கள் கொண்டனவாதலின், ஆராய்ச்சி யாளர்க்கு ஓரளவு இந்நூல் பயன்படுவதாகும்.

தெரிந்து கொள்ளுங்கள்.

–சனார்த்தனம்–

1. 158 அடிகள் கொண்ட கிரேக்கத்தின் நாட்டுப்பாடல்தான் உலகிலேயே மிக நீண்ட நாட்டுப்பாடல். மிகக் குறுகிய அடிகள் கொண்ட நாட்டுப்பாடலை உடைய நாடு 'சப்பான்'. நான்கு அடிகள் தாம் உள்ளன.

2. கைக் கடிகாரங்களில் 150 முதல் 800 வரை உறுப்புகள் உள்ளனவாம். கைக் கடிகாரங்களில் பயன்படும் மயிரிழை விறைப் புக் கம்பி, தலைமயிரின் அரைப்பங்கு கனத்துக்கும் குறைவா னதே. ஒரு வீசங் கல்லெடை (பவுண்டு) எடையுள்ள எஃகு இரும்பி லிருந்து 20 கற்கள் நீளமுள்ள 'மயிரிழை விறைப்புக் கம்பி' தயாரிக்கலாம்.

3. அமெரிக்காவில் ஒவ்வொருநாளும் 26 கோடி உருபா மதிப்புள்ள தாலர் பணத்தாள்கள் கொளுத்தப் படுகின்றன. அவை பயன் படாத சேதமுற்றவை.

4. நம் நாட்டின் தலைநகரில் மட்டும் ஒரு காலைக்கு 12,00,000 அஞ்சல்கள், அஞ்சல் பெட்டிகளில் வீழ்கின்றன.

இருண்ட வீடு.

மூலக்கதை:- பாவேந்தர் பாரதிதாசன்.
நாடக ஆக்கம்:- கு. ஐந்தெழுத்தன்.

காட்சி-7.

[வீட்டுத் தலைவி காலை நீட்டிக்கொண்டு, குழந்தையை மடியில் வைத்துக் குந்தியிருக்கிறாள். வாடி மெலிந்த குழந்தை தாயின்மேற் சாய்ந்து கிடக்கிறது.]

தலைவி:- அடியே, சங்கிலி! வடையும் பிட்டும் வாங்கினாயே, எங்கே? கொண்டுவா, இப்படி; குழந்தைக்குப் பசி!

[தட்டில் வடையும் பிட்டும் கொண்டுவந்து வைக்கிறாள் சங்கிலி. வீட்டுத் தலைவர் அங்குவந்து, அவ்வடையையும் பிட்டையும் அவற்றில் மொய்த்த ஈயுடன் பிசைந்து வாயில் வைக்கிறார். சற்றுநேரத்தில் உண்டதைக் கக்குகிறார். எதுவும் வேண்டா என்று கையாற் குறிப்புக் காட்டிவிட்டு, அப்பால் நகர்கிறார்.]

[பெரிய பையன் அங்குவந்து, பிட்டைப் பிசைந்து தின்ன முற்படுகிறான். தின்னமுடியாமல் தவிக்கிறான். வீட்டுத்தலைவி பிட்டைப் பிசைந்து குழந்தையின் வாயில் திணிக்கிறாள். பேசும் ஆற்றல் இல்லாமையால், அக்குழந்தை தாயை மருண்டு நோக்குகிறது.]

காட்சி-8.

[கூடத்தின் நடுவில், வாடிய சருகுபோல் பாயிற் சுருண்டு கிடக்கிறான், பெரிய பையன். வீட்டுத் தலைவர் ஒருபக்கம் சாய்வு நாற்காலியிற் படுத்துக்கிடக்கிறார். ஒருபுறம் கைக்குழந்தை வயிறு உப்பி, குற்றுயிராய்த் தடுக்கில் கிடக்கிறது. கடைக் கணக்கன் நடையில் பெருந் தூக்கத்தில் ஆழ்ந்திருக்கிறான். வேலைக்காரர்கள் மூலையிற் குந்தியவாறே, மாலைநேரத்தின் வருகையை எதிர்நோக்கியிருக்கின்றனர்.

தலைவி:- (தனக்குள்) குழந்தைக்கு என்ன கோளாறு? வளர்ப்பு முறையில் தவறு ஏதும் இல்லையே! வேளை தவறாம தீனி கொடுத்து, கண்ணைப்போலக் காப்பாத்தி, நோய்நொடி வராம பார்த்துக்கொள்றேனே... அப்படியிருக்க ... (சங்கிலியின் பக்கம் திரும்பி, உரத்த குரலில்) போய், மந்திரக் காரனைக் கூட்டிட்டுவா!

சங்கிலி:- எதுக்காக அம்மா?

தலைவி:— இருளன் நுழைஞ்சதாலே இந்த வீடு தீட்டுப்பட்டுப்போச்சு. அதனுலேதான் குழந்தை அழுதது, காலையிலே!

சங்கிலி:— அப்படியா அம்மா! நான்போய் வாலனைக் கூட்டிவாரேன்!

தலைவி:— சரி, போ. (சங்கிலி புறப்படுகிருள்)

தலைவர்:— ஏய், சங்கிலி! இப்போ போகாதே! ஏழரை–ஒன்பது; இராகு காலம்!

தலைவி:— அதுவும் சரிதான்; அப்புறம் போகலாம்.

சங்கிலி:— நல்லது அம்மா. (திரும்புகிருள்)

[பின்னர் வீட்டுக்காரியும் வேலைக்காரியுமாகச் சேர்ந்து, நாலைந்து கடவுளரின் பெயர்சொல்லிக் குழந்தைக்குக் காப்புக்கட்டி முடித்து, வேப்பிலை ஒடிக்கப் புறப்படுகின்றனர்.]

காட்சி–9.

[வீட்டின் முன்பகுதியில் தலைவரும், கணக்கன் காட்டுமுத்துவும் பேசிக்கொண்டிருக்கின்றனர். வட்டிக்குப் பணம் வாங்கிய பட்டுச் செட்டி வருகிருன்.]

செட்டி:— ஐயா! வட்டியும் முதலுமாகக் கொண்டுவந்திருக்கேன். இராகுகாலம் கழிஞ்சபின்னுலேதான் கொடுக்கிறேன். கணக்கா எண்ணிக் கருத்தா பெட்டியிலே வைச்சுப் பூட்டுங்க. பிறகு என்மேல எதுவும் குறைசொல்லாதீங்க.

[கணக்கன் பணத்தை வாங்கிக்கொண்டு, கடன் சீட்டை எடுத்து வரவு வைக்கிருன்.]

காட்சி–10.

[பகல் மணி பன்னிரண்டு. பழங்கல அறைக்குள் ஒளிந்திருந்த கிழட்டு எலிகள், தங்கள் சுற்றத்தாருடன் கூடத்துக்கு வந்து, குண்டான்மேலும் குடங்களின் மீதும் ஏறிப் பாடியாடுகின்றன. தயிர் மொந்தையில் தலையை நுழைக்க முயன்ற பூனை, முடியாதது கண்டு மொந்தையைச் சாய்த்து நக்குகிறது. வடித்த சோற்றைக் கண்ட தடிக்காக்கைகள் தின்றுதீர்க்கின்றன; முகட்டுவளையில் மண்டிக்கிடந்த

ஒட்டடைகள் காற்றினுல் அசைந்து மலர்மாரிபோலத் தரையில் விழுகின்றன. தரையிற் கிடந்த தூசு தும்புகள் காற்றில் மேலெழுகின்றன.]

காட்சி–11.

[சங்கிலி தலைவரை உணவுகொள்ள அழைக்கிருள். பசியால் வாடிய தலைவரும் மெல்ல எழுகிருர். அந்நேரத்தில் இரண்டு பல்லிகள் மாறி மாறி ஒலிக்கின்றன. இதைக்கேட்ட அவர், 'நல்ல நேரம் இல்லை' என்று, மீண்டும் ஒய்வு நாற்காலியிற் சாய்கிருர்.]

கணக்கன் :– (உறக்கத்திலிருந்து விழித்து, தலைவர்முன் வந்து நின்று) ஐயா! இன்னைக்கு நீங்க எலந்தையூர்க்குப் போய், சிற்றம்பலத்திடம் பணம் வாங்கவேண்டும் என்று சொன்னீங்களே! அவன் ஐதராபாக்கத்துக்கு ஓடிவிட்டால், வழக்குப் போட்டாலும் பயன் படாதே!

தலைவர்:– நல்லா சொன்னே. நீ போய், அஞ்சு உருபா முன்பணம் கொடுத்து, ஓர் இயங்கி பேசிக் கொண்டுவா. அப்படியே, ஊர் காவலர் இருந்தா, அவர் கையிலே அஞ்சு உருபா கொடுத்து அழைச்சுகிட்டுவா. (கணக்கன் போகிருன்.)

காட்சி–12.

[வெளியே நாய் குரைக்கிறது. வீட்டுத் தலைவர் வாயிற்பக்கம் தலையை நீட்டிப் பார்க்கிருர். அளியர் (மைத்துனர்) வருவதை யறிந்து வரவேற்கிருர். அளியர் வாயிற்படிமீது அடிபெடுத்து வைக்கிருர். கால் இடறுகிறது.]

தலைவர்:– மச்சான்! உள்ளே வராதீங்க. நேரம் சரியில்லே.

மைத்துனர்:– அப்படியா! நான் வரல்லே!

[நல்லவேளை வரும்வரையில் உள்ளே நுழைதல் ஆகாதென, எதிரிலிருந்த மாட்டுக் கொட்டகையில், கொசுக்கள் சுற்றிலும் மொய்க்க அமர்ந்திருக்கிருர். ஊர்காவலருடன் இயங்கி வருகிறது. தலைவர் கணக்கனுடன் அதில் ஏறி அமர்கிருர்.]

கணக்குப் புதிர்.

நாற்றமிகு—செம்பியன்.

1. எட்டு எட்டுகளை எப்படி வேண்டுமானாலும் போட்டுக்கூட்டி ஆயிரம் வரவழையுங்கள்; பார்க்கலாம்.

2. மூன்று ஒன்பது, மூன்று எட்டு, மூன்று ஏழு. இவற்றை போட்டுக் கூட்ட '999' விடையாக வர வேண்டும். உங்களால் முடியுமா?

3. ஏழு ஒன்றுகளைக் கொண்டு, நீங்கள் எதைச் செய்தாவது 1300 ஐ-விடையாகக் காட்டினால்... .. உங்களை நான் 'திறமைசாலி' என்பேன். எங்கே முயலுங்கள்; பார்க்கலாம்.

4. 7101449275362318840579-இதை 7 ஆல் வகுத்தால் விடை என்ன? ஒரே நிமையத்தில் சொல்ல வேண்டும்!

5. 421052631578947368-இதை 2 ஆல் பெருக்கினால் என்ன வரும் என்பதை ஒரே ஒரு மணித்துளியில் சொல்ல முயலுங்கள்.

---

5. கடைசியில் உள்ள 8 ஐ எடுத்து முதலில் போட்டால் அது தான் விடை.

4. முதலில் உள்ள 7 ஐ எடுத்துக்கடைசியில் போடுங்கள். அது தான் விடை.

3. $14 \times 11 \times 11 - 1 = 1300$.

2. $887 + 78 + 9 + 9 + 7 + 9 = 999$.

1. $888 + 88 + 8 + 8 + 8 = 1000$.

விடைகள்:

தமிழ்ச்சிட்டு, கடலூர்-1.

(தனித்தமிழ் சிறுவர் கலையிதழ்)

மாற்றப்பட்ட உறுப்பினர் கட்டணங்கள்.

	உள்நாடு.	வெளிநாடு.	கொழும்பு.
ஆண்டுக் கட்டணம்	உருபா 2-50		4-00
தனியிதழ்	,, 0-20		0-30

(அரையாண்டுக் கட்டணம் இல்லை)

ஓரிதழுக்கு 40 காசு மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

பெருமைக்கு ஒரு பெண்!

—பாவை. நடவரசன்—

"இந்த நூற்றுண்டில் பெரியவர்கள் என்று சொல்லக் கூடியவர்கள் இருவர்: நெப்போலியனும் எலன் கெல்லரும்" இப்படிப் பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதியிலேயே இலக்கியப் பேரறிஞர் மார்க்குதிவையன் கூறிப் போந்தார். அப்பொழுது எலன் கெல்லருக்கு அகவை இருபதுகூட ஆகவில்லை.

அத்தகைய பெருமைக்குரிய அவர், அமெரிக்காவில் வடஅலபாமா மாகாணத்தைச் சேர்ந்த தாக்கும்பியர் எனும் நகரில் 27-6-1880-இல் பிறந்தார். செப்புப்பாவைபோல மிகஅழகாகப் பிறந்திருந்தார். கூன், குருடு, செவிடு இன்றிக் கைகாலை ஆட்டி, 'அம்மா' எனக் கத்தி வீட்டையே கலக்கிக் கொண்டிருந்தார். ஆறுவது மாதத்திலேயே நலமா? (How d'ye do) எனக் கேட்கத் தொடங்கிவிட்டார்.

அவர் பிறந்த இல்லம் செயற்கைச் சோலையின் நடுவில் அமைந்திருந்தது. பசும்புல் தரைகள், படர்கொடி வேலிகள், நறுமலர்ச் செடிகள், நற்கனிக் கொடிகள்—ஆகிய அனைத்தும் நிறைந்த சோலை, அந்த வீட்டைச் சுற்றிலும் இருந்தது. அந்தச் சோலையில்தான் இந்த எலன் கெல்லர் என்னும் பாப்பா பாடித்திரிந்தாள்; பூக்களைக்கொய்து வந்தாள்; புள்ளி மானுய்த் துள்ளி ஓடினுள்.

இந்த மகிழ்ச்சியைத் தடுப்பதற்கோ என்னவோ அவரது பத்தொன்பதாவது மாதத்தில் அவரைக் கொடிய நோய் தாக்கியது. அந்த நோய் அவரை விட்டுப் போகும்பொழுது அவரது கண்ணை, காதை, வாயைக் கெடுத்துவிட்டுப் போயிற்று. அதனுல், அவருடைய கண், குருடானது; காது, செவிடானது; வாய், ஊமையானது. அவரோ அறுக்கப்படும் ஆடுபோல் துடித்தார். புதிய புதிய சொற்களைச் சொல்லிவந்த வாய், இப்பொழுது சொல்லமுடியவில்லையே எனத்துடித்தார். "அம்மாவின் பேச்சைக்கேட்க முடியவில்லையே! பறவைகளின் ஓசையையும் கேட்க முடிய வில்லையே" என நினைத்து அலமந்தார். நோய்க்குப் பின்னர் குருடாய், செவிடாய், ஊமையாய்ப் போய்விட்ட கெல்லர் அடைத்து வைத்த ஊற்றுப்போல், மூடிவைத்த உலைபோல் உள்ளத்துள்ளே பொங்கினுர். எங்குச் சென்றுலும் அம்மாவின் ஆடையைப் பிடித்துக்கொண்டே செல்லுவார். யாராவது பேசினுல், அவருடைய உதடுகளில் கைவத்து, அஃது அசைவதைத் தொட்டு உணர்

வார். தாமும் அப்படி அசைக்க முயல்வார்; முடியாமல் போகும். உடனே தரையில் விழுந்து, கைகால்களை ஆட்டிக் கொண்டு புரண்டு அழுவார். களைப்பு ஏற்படுகின்ற வரையில் அப்படிப் போராடுவார்.

அவருக்கு அந்தப் போராட்டத்தின் வெற்றி நாளாக 3-3-1887-ஆம் பக்கல் வந்தது. அன்று காலையில் ஏழாண்டு அகவையான கெல்லர், இல்லத்தின் வாயிற்படியில் நின்று, யாரையோ எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். அதற்குப் பின் நிகழ்ந்ததை அவரே கூறுகிறார், கேளுங்கள்: ''என்னை யாரோ அணுகி வருகின்ற காலடி ஓசை கேட்டது... என் கைகளை நீட்டினேன். யாரோ என் கையைப் பிடித்துக் கொண்டார்; என்னைக் கட்டி அணைத்து இறுகத் தழுவிக் கொண்டார்....'' அவர்தாம் எலனுக்குக் கிடைத்த ஆசிரியை குமரி. செல்லிவன்.

தளராத உணர்வும் தன்னம்பிக்கை உள்ளமும் நிறைந்த ஆசிரியை, அவர். அமிழ்ந்து ஆழ்ந்து கிடந்த கெல்லரின் மனத்தை வெளிக் கொணர்ந்து, ஒளிபெறச் செய்தவர், அவர். இருண்ட உலகுக்கு எப்படி எழுகதிர் ஒளி கொடுக்கக் கிடைத்ததோ, அப்படிக் கெல்லருக்குக் கிடைத்த அன்பொளி, அவர்.

ஒருநாள், பொம்மையை வைத்து விளையாடிக் கொண்டிருந்தார், கெல்லர். அதனைப் பார்த்துக் கொண்டிருந்த ஆசிரியை, கெல்லரின் கையைப்பிடித்து, அவர்தம் உள்ளங்கையில் D- O- L- L. (பொம்மை) என்று எழுதுகிறார். ஏதோ ஒன்றினை உணர்ந்தது போல் புதிய ஒளியைப் பெற்றதுபோல் முகம் மலர்ந்தார். உடனே ஆசிரியை கையைப் பிடித்துத் தன் கையில் அவர் எழுதியதுபோல் தாமும் அவர் கையில் D- O- L- L. என எழுதினார். எழுச்சியுற்ற கூட்டம்போல் மகிழ்ச்சியில் துள்ளினார்- எழுந்தோடி அம்மாவின் கையில் எழுதினார்; அப்பாவின் கையில் எழுதினார். எழுதிவிட்டு, ஏதோ ஓர் உலகினைக் கண்டு பிடித்ததுபோல் கைகால்களை ஆட்டிக் குதித்தார்.

மற்றொரு நாள் ஓடிவரும் தண்ணீரில் கையை வைக்கச் சொன்னார், ஆசிரியை. அத்தண்ணீர் அவர் கைவிரல்களுக்கிடையில் குளு குளு எனப் பாய்ந்தோடியது. அந்தக் குளுமையில் அவர் உடல், உள்ளம், உணர்வு, உயிர்–எல்லாம் நனைவதுபோல் உணர்ந்தார்; உணர்ந்து மகிழ்ந்தார். அப்பொழுது அவர் கையைப் பிடித்த ஆசி

ரியை W- A- T- E -R- என எழுதினுர். தண்ணீர் என்னும் அந்தச் சொல்லே அவர் கையில் எழுதும் பொழுதே, அவர் எல்லையில்லாப் பெருமகிழ்வை, கண்டார். அது மட்டுமா!... மொழியின் உயிர்த்துடிப் பையும் உணர்ந்தார்.

தோப்புத் தோட்டங்களுக்கும், வயல்வெளிகட்கும் ஆசிரியை அழைத்துச் செல்வார். அங்கு, நீல வானத்தையும் நெடுங்குன்றையும் விளக்கிச் சொல்லுவார். பல வண்ணச் செடி கொடிகளையும், பசும்புல் இலைதழைகளையும் தடவிப் பார்க்கச் சொல்லுவார். பறக்கும் பறவை கள், நடக்கும் விலங்குகள் முதலியவற்றின் வரலாற்றைக் கதைபோல் எடுத்துச் சொல்லுவார். இப்படி நாளும் உலகில் உள்ள ஒவ்வொரு பொருளுக்கும் பெயர் இருப்பதை உணர்த்தி வந்தார். ஒவ்வொன்றை யும் தொட்டுத் தடவி, உணர்ந்து பார்க்கச் சொல்லி அவருக்கு அறிவை ஊட்டி வந்தார்.

தொட்டு உணர்ந்த பெயர்களை வாய்விட்டுச் சொல்லத்துடித்தார். அதற்கும் ஒருநாள் (6-3-1890) வந்தது. அன்று, திரு. புல்லர் என் பவர் கெல்லரைப் பேசவைக்க முன் வந்தார். அவர் எப்படிப் பேசவைத் தார் என்பது பற்றிக் கெல்லர் கூறுவதையே கேட்போம். "என் கை களால் அவர் (ஆசிரியர்) முகத்தையும் உதடுகளையும் தடவிப் பார்க்கச் சொல்லுவார். உதடுகள் நாக்கு இவற்றை எப்படி வைத்துக்கொண்டு அவர் ஓர் ஓசையை எழுப்பினுர் என்று என்னை விரல்களால் தடவிப் பார்க்கச் சொன்னுர். அவர் செய்ததைப் போன்றே நானும் செய்தேன்! இப்படித்தான் சொற்களைச் சொல்லிப் பழகி வந்தார். அப்படிப் பழகிய அவர் முதன்முதலில் சொல்லிய சொற்றெடர், ''இப்பொழுது வெப்ப மாக இருக்கிறது'' என்பதாகும். விரல்களுக்கிடையில் சிக்கித் தவித்த அவரின் எண்ணங்கள் வாய்வழியாகக் கொப்பளித்து வந்தன. ஒவ் வொருசொல்லின் ஓசையையும் நூறுமுறைக்கும் பல நூறுமுறையாகத் திரும்பத் திரும்பச் சொல்லுவார். வாய் வலிக்கின்றவரையில் சொல்லிக் கொண்டே இருப்பார். அப்படி இருந்ததனுல்தான், மிக விரைவில் பேசினுர்.

ஊமை நீங்கியது என்ருலும் கண்குருடும், காதுச் செவிடும் நீங் கவே இல்லை. இருந்தாலும், 1896-ஆம் ஆண்டில் கேம்பிரிட்சு பள்ளி யில் சேர்ந்தார். எலன்கெல்லருக்குத் துணையாக ஆசிரியை செல்லி வனும் உடன் சென்று, பள்ளியில் சொல்வதைக் குறிப்பெடுத்தும்,

புதிய சொற்களை எழுதிவந்தும் எலன்கெல்லருக்கு வீட்டில் பாடம் சொல்லித் தருவார்: அவர் கையில் புதிய எழுத்துகளை—கருத்துகளை எழுதிக்காட்டுவார். இம்முறையில் ஆங்கில இலக்கியம், கணிதம் செருமன்மொழி முதலிய பாடங்களைக் கற்றார்; தேர்வில் வெற்றியும் பெற்றார்.

பின்னர் கல்லூரியில் சேர்ந்து, கண்ணுங் கருத்துமாகப் பாடத்தைத் தொட்டுப் படித்தார். மற்றவர்கள் கண்ணால் பார்த்துப் படிக்கின்ற பொழுதெல்லாம், இவர் கை விரல்களால் எழுத்துகளைத் தொட்டுத் தடவிப் படித்தார். காதால், மற்றவர்கள் புதிய சொற்களை—சொற்றொடர்களைக் கேட்கின்ற பொழுதெல்லாம், அவர் தம் ஆசிரியையும் அதனைக் கேட்டுவந்து வீட்டில் கெல்லரின் கையில் எழுத, எழுத உணர்ந்து, அறிந்துவந்தார். இப்படி அல்லும் பகலும் அயராது படித்தார். சலியாத உழைப்பாலும் விடாமுயற்சியாலும் 1904-ஆம் ஆண்டு கலையிளைஞர் (B. A.) பட்டம் பெற்றார்.

ஓய்வு நேரங்களில் குதிரை ஏறிச்செல்லுவார்; பூநூல் வேலை செய்வார்; படகு தள்ளுவார்; நாடகம் பார்ப்பார்; மிதிவண்டி விடுவார்; சதுரங்கம் விளையாடுவார். பல உயர்ந்த நூற்களை, எழுத்தாளர்களே பொறுமைப் படும்படி எழுதியுள்ளார். அதனால்தான், அரசகுடும்பத்தினரும் அரசியல் தலைவர்களும், அறிஞர் பெருமக்களும் இவரை வரவழைத்து வாழ்த்தினார்கள். உலகின் எட்டாவது வியப்பு (அதிசயம்) என்றார்கள்.

அத்தகைய அவர் 1968-ஆம் ஆண்டு சூன் திங்களில் மறைந்து விட்டார் ஆனாலும் அவர் வாழ்ந்த வாழ்க்கை ஓமர் இலக்கியம்போல் அழியாமல் இருக்கும்; மில்டனின் படைப்புப்போல் உண்மை ஒளி வீசி நிற்கும்.

தமிழ்ச்சிட்டே! நீயும் அப்படி உலகுக்கு ஒளி நிறைந்த வாழ்க்கையை விட்டுச் செல்லவேண்டும்.

. O

வாய் நாற்றம் நீங்கும்!

ஓர் எலுமிச்சம் பழத்தைப் பிழிந்தெடுத்த ஒரு குவளை நீரால், நாள்தோறும் வாய் கொப்பளித்து வந்தால் வாய் நாற்றம் போய் விடும்.

—பெ. க.

மறைந்த எண் என்ன?

சில தனி எண்களைக் கொண்ட ஒரு கூட்டு எண்ணை நினைத்துக் கொள்ளும்படி உங்கள் நண்பரிடம் கூறுங்கள்.

அவர் 1234 என்று நினைப்பதாக வைத்துக்கொள்வோம், உடனே, அந்த எண்களைக் கூட்டச் சொல்லுங்கள். (1+2+3+4) 10 என்று சொல்லுவார், அந்த எண்ணை (பத்தை) அவர் நினைத்த எண்ணிலிருந்து (1234) கழிக்கச் சொல்லுங்கள். 1224 வரும். இந்த எண்களில் ஏதேனும் ஓர் எண்ணை மறைத்துக் கொண்டு, மற்ற எண்களைச் சொல்லும்படி சேளுங்கள். 122 என்பதாக வைத்துக்கொள்வோம். அவர் மறைத்த எண்ணைச் சொல்லவேண்டும். எப்படி? அவர் சொன்ன எண்களைக் கூட்டுங்கள். (1+2+2,5 என்ற எண் வரும். இதை 9 என்னும் எண்ணிலிருந்து கழித்தால் (9-5)4 வரும். இந்த 4 தான் அவர் மறைத்த எண்.

அவர் சொன்ன எண்களைக் கூட்டும் பொழுது 15 வந்தால், அதை, ஒன்பதின் இருமடங்கான 18இல் கழித்து விடை சொல்லுங்கள்: அவர் மறைத்த எண் (18-15)3.

இதைப்போலவே ஒன்பதின் மற்றைய படங்குகளான 27, 36, 45, 54 என்னும் எண்களைப் பயன்படுத்தி, மறைந்த எண்ணைச் சொல்லலாம்.

எடுத்துக்காட்டாக, நண்பர் நினைத்த எண் 8459 என்றால் கூட்டிவரும் எண் 26. அதை நினைத்த எண்ணிலிருந்து கழித்தால், (8459-26) 8433 இதில் அவர் 4 ஐ மறைத்துக் கொண்டு 833 என்று சொல்வதாக வைத்துக்கொண்டால், இந்த மூன்று எண்களைக் கூட்டும் பொழுது (8+3+3) 14 வரும். இதை 18இல் கழித்தால் 4 வரும். இதுதான் அவர் மறைத்த எண்.

இது மிகவும் புதுமையாக இருக்கிறது, இல்லையா? உங்கள் தோழர், தோழியர்களிடம் இந்த முறையைக் கையாண்டு காட்டுங்கள் உங்கள் மதி நுட்பத்தை!

–சந்திரசேகரன், திருவண்ணாமலை.

பயன்மொழிகள்.

0 என் மனம் தூய்மையாய் இருத்தலான், யான் பதின்மரின் வலிவை உடையவனாய் உள்ளேன்.

—தென்னிசன் (Tennyson)

0 உண்மை உன்னை எங்கிழுத்துச் சென்றாலும் அதனையே பின் பற்றிச் செல். கோழையாகவும் நடிப்பவனாகவும் இராதே.

—விவேகானந்தர்

0 பழமை என்னும் ஒரே காரணியம் பற்றி எதற்கும் சிறப்புத் தரும் வழக்கம் அடியோடு தொலைதல் வேண்டும்.

—பெர்னார்டு சா.

0 ஓடுகின்ற பொழுதை விடாமல், இறுக்கமாய்ப் பிடித்துக் கொள். ஒவ்வொரு நொடியையும் பயன்படுத்தி உன்றன் வாழ்வில் முன்னேறு.

—சாமுவேல் சான்சன்.

0 துன்பத்தைப் பொறுக்க வல்லவனால்தான் எந்தப் பெரிய செயலையும் செய்ய இயலும்.

—மிலிட்டன்.

0 உழைப்பு! உழைப்பு!! நேர்மையான உழைப்பொன்றே மாந்த வினத்தின் பிணிகளையும் துயர்களையும் போக்கக் கூடிய த[illegible]ச் சிறப்பான மருந்து.

—தாமசு கார்லைல்.

0 மாந்தத் தன்மையற்ற இறை நம்பிக்கைக்காரனினும், மாந்தத் தன்மையுள்ள இறை மறுப்புக்காரனே மிக மிக மேலானவன் என்று நான் கருதுகிறேன்.

—இங்கர்சால்.

0 ஒரு பெரிய நூலை மிக விரைவாய்ப் படித்து முடித்தலினும், ஒரு பக்கத்தை நன்றாகப் படித்து அறிவு பெறலே சிறந்தது.

—மெக்காலே.

0 பிறர் இழைத்தது பெருங் குற்றமே யாயினும் அதை நீவிர் செய்திருக்கக் கூடிய ஒரு பொதுவகைப் பிழைக்குச் சமமாய்க் கருதி, உடனே மன்னித்து விடுக.

நீவிர் செய்தது சிறிய பிழையே யாயினும் அதைப் பொறுத்தற்கரிய மாபெரும் குற்றமாகக் கருதி வருந்துக.

—பிளினி.

0 அன்பும் சிரிப்பும் இல்லையேல் மகிழ்வில்லை. ஆதலின் அன்புக்கும் சிரிப்புக்கும் இடையே வாழ்க.

—ஒரேசு.

0 சமயம் வாய்க்கட்டும்; பலநற்செயல்களை ஒரேயடியாய்ச்செய்து விடலாம் என்று காத்திருப்பவன் எந்தச் சமயத்திலும், எதுவும் செய்ய மாட்டான்.

—சாமுவேல் சான்சன்.

0 அறிவாளியின் ஒருநாள் முட்டாளின் முழு வாழ்விற்குச்சமம்.

—அரேபியப் பழமொழி.

தொகுப்பு: 'உணர்வேந்தி'

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.